

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | நவம்பர் 18, 2021 | புரட்சி 20 | முழக்கம் 38 | விலை: ரூ.3.00


## சிவ... சிவ... சிவ...

*'இந்து மதம்' என்பதாக ஒரு மதமே இல்லை என்றார் இறந்து போன காஞ்சி சீனியர் சங்கராச்சாரி சந்திரசேகரேந்திரர்; தமிழ்நாட்டில் சைவம் – வைணவர்கட்கும் கடும் பகை. வைணவத்திலேயே வடகலைக்கும் தென் கலைக்கும் நடந்த மோதல்களை சொல்லவே வேண்டாம். மதுரையில் 8000 சமணர்களை கழுவேற்றித் துடிக்க துடிக்க கொலை செய்தது சைவம்.*

*மறைந்த 'கரிசல் மண்' எழுத்தாளர் கி. ராஜநாராயணன், வைணவக் குடும்பத்தில் பிறந்தவர். அவர் தனது 'கரிசல் காட்டுக் கடுதாசி நூலில்' கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்:*

"சிவனுடைய பெயரை யாரும் எங்கள் வீட்டில் மறந்தும் உச்சரிக்க மாட்டோம். அசந்து மறந்து சொல்லி விட்டால் சாட்டை அடி விழும். எங்கள் வீட்டில் வேலை செய்யும் வேலையாட்களின் பெயர்கள்கூட சிவப் பெயர் கிடையாது. இதில் எங்கள் அப்பா ரொம்ப ஜாக்கிரதை! நாங்கள் மணிகட்டி வைணவர்களின் பரம்பரை! மணிகட்டி வைணவர்களின் ரெண்டு காதுகளிலும் சிறிய வெள்ளி மணிகள் கட்டித் தொங்கவிட்டிருக்கும். எங்காவது எவனாவது சிவனுடைய பெயரை அசந்து மறந்து சொல்லித் தொலைத்து விட்டால் உடனே வேகமாகத் தலையைக் குலுக்குவோம். இந்த மணிகள் ஒலித்து, சிவ நாமத்தைக் காதினுள் நுழைய விடாமல் விரட்டி அடித்து விடும்!"

*நடந்த ஒரு சம்பவம் ஒன்றையும் அந்த நூலில் 'கி.ரா.' விவரித்துள்ளார்:*

"ஒரு சத்திரத்தில் மூணு சிவப் பண்டாரங்கள் வந்து தங்கியிருந்தார்கள். என்ன காரணம் என்று தெரியவில்லை; அதில் ரெண்டு பண்டாரங்களுக்குள் பலத்த 'அடிதடி' நடந்தேறிவிட்டது. மூணாவது பண்டாரம் இதைப் பார்த்துப் பலத்த கூக்குரலிட்டார். சத்திரத்தின் கார்பாரி ஓடி வந்து அவர்களைப் பிடித்துக் கொண்டு போய் ஊர் நாட்டாண்மை நாயக்கரிடம் நிறுத்தினார். கிராமத்தின் நாட்டாண்மையும் விவகாரி யுமான அவர் ஒரு மணி கட்டி வைணவர் என்பது அவர் காதுகளில் தொங்கும் மணிகளே சொன்னது.

சத்திரத்து அதிகாரியான கார்பாரி அந்தப் பண்டாரங்களைக் கொண்டு வந்து அவர் முன் நிறுத்தியதோடு விலகிக் கொண்டார். நடந்ததைப் பார்த்தவர் மூணாவது பண்டாரம் தான். அவர் தான் கண்கண்ட சாட்சி. என்ன நடந்தது என்று 'விவரித்தார்' அவர்!

அந்த மூணாவது சிவப் பண்டாரம் மூச்சுக் காற்றை வெளியே விடும் போதும் சிவ; மூச்சுக் காற்றை உள்ளே இழுக்கும்போதும் சிவ! அப்படி ஒரு சிவயோக சிவப் பண்டாரம் அல்லது பண்டார சிவம்! அவர் தன்னுடைய சாட்சியத்தை ஆரம்பித்தார்.

முதல் பண்டாரத்தைச் சுட்டிக் காட்டி, "இச் சிவம் அச்சிவத்தை சிவ." அதாவது, இவர் – இந்தப் பண்டாரம் – அந்தப் பண்டாரத்தை ஓர் அடி வைத்தார் முதலில்.

பதிலுக்கு அவர் என்ன செய்தாராம்! "அச் சிவம் இச்சிவத்தை சிவ சிவ..." – ரெண்டாகப் பதிலுக்குத் திருப்பித் தந்தார். மேலும் என்ன நடந்தது?

"இச் சிவம் அச்சிவத்தை சிவ சிவ சிவ..." அவ்வளவு தான்; அதுக்குப் பிறகு நடந்ததை இப்படி வேகமாக விவரித்து முடித்தார். "இச்சிவம் அச் சிவம் அச் சிவம் இச் சிவம் சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ...."

பாவம், மணிகட்டி வைணவர் பாடு திண்டாட்டமாகப் போய் விட்டது! தலையை எப்படிக் குலுக்கியிருப்பார் என்று சொல்லத் தேவையில்லை."

அப்போது தொடங்கிய சைவ – வைணவப் போர் இப்போது 'திருவிழாக்கள்' வரை எதிரொலிக்கிறது.

– புரட்சிப் பெரியார் முழக்கம் 18.11.2021

### 'பெண் ஏன் அடிமையானாள்?' நூலுக்கு எதிர்ப்பா?

# சங்கிகள் அடாவடியை எதிர்த்து – அனைத்துக் கட்சிகளும் திருப்பூரில் ஒன்று திரண்டன

**பா.ஜ.க.–இந்து முன்னணி அடாவடியை எதிர்த்து அனைத்துக் கட்சிகளும் களத்தில் இறங்கும் நடவடிக்கை திருப்பூரில் தொடங்கி இருக்கிறது.**

திருப்பூர் மாநகராட்சி பள்ளி நூலகத்திற்கு தன்னார்வலர் பெரியார் புத்தகங்களை கொடையாக வழங்கியதை எதிர்த்து பள்ளிக்கு அத்துமீறி நுழைந்து ஆசிரியர் களை மிரட்டிய பாஜகவினர் !

திருப்பூர் மாநகராட்சி பள்ளியில் பெரியார் புத்தகம் மொத்தமாக விநியோகம் செய்ததாகக் கூறி, பள்ளியை பாஜகவினர் முற்றுகையிட்டனர்.

திருப்பூர் ஜெய்வாபாய் மாநகராட்சிப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள்ள நூலகத்துக்கு தன்னார்வலர்கள் புத்தகங்கள் வழங்கி வந்தனர். அதன் ஒரு பகுதியாக, திருப்பூர் ஜெய்வாபாய் மாநகராட்சிப் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு பெரியார் எழுதிய, 'பெண் ஏன் அடிமையானாள்' என்ற புத்தகம் சுமார் 2 ஆயிரம் பிரதிகளை தன்னார்வலர் ஒருவர் வழங்கினார்.

இதனை அறிந்த திருப்பூர் வடக்கு மாவட்ட தலைவர் செந்தில்வேல் தலைமையில் பாஜகவினர் சுமார் 10 பேர் பள்ளி வளாகத்துக்கு வந்து, புத்தகங்களை யாருக்கும் தரக் கூடாது என்றனர். மொத்தமாக எதற்காக 2 ஆயிரம் பிரதிகள் வழங்கினார்கள் என, பள்ளித் தலைமை ஆசிரியர் உள்ளிட்டோரிடம் கேள்வி எழுப்பி தகராறு செய்துள்ளனர்.

திருப்பூர் ஜெய்வாபாய் பெண்கள் மாநகராட்சி மேல்நிலை பள்ளிக்குள் அத்துமீறி நுழைந்து ஆசிரியர்களை மிரட்டி ரவுடித்தனம் செய்த சமூக விரோத பாஜக வினரை கைது செய்ய வலியுறுத்தி திவிக சார்பில் திருப்பூரில் திவிக மாவட்ட தலைவர் முகில்ராசு தலைமையில் 13.11.2021 அன்று காவல்துறை ஆணையரிடம் கோரிக்கை மனு காலை 11 மணிக்கு அளிக்கப்பட்டது.

திருப்பூரில் பாரதிய ஜனதா கட்சி இந்து முன்னணி போன்ற மதவெறி அமைப்புகளின் அராஜக போக்கையும், அத்துமீறல்களை கண்டித்தும், அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் 12.11.2021 வெள்ளிக்கிழமை திருப்பூர் பாராளுமன்ற உறுப்பினர் சுப்பராயன் முயற்சியில் இந்திய கம்னியூஸ்ட் கட்சி அலுவலகத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் பாரதிய ஜனதா கட்சி இந்து முன்னணி போன்ற மதவாத அமைப்புகளின் அராஜக அத்துமீறல்கள் மற்றும் ஜெய்வாபாய் பெண்கள் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் பெண் ஏன் அடிமையானாள் புத்தகம் வழங்கப்பட்டதை எதிர்த்து சட்ட விரோதமாக பெண்கள் பள்ளி வளாகத்திற்குள் நுழைந்து ஆசிரியர்களை மிரட்டிய பாஜக, இந்து முன்னணியினர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டி தமிழக முதல்வரின் கவனத்திற்கு இப்பிரச்சனையை கொண்டு செல்வது என அனைத்துக் கட்சிகளின் சார்பில் முடிவெடுக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக முகில் இராசு (மாவட்ட தலைவர் திவிக), ராமசாமி (தெற்குப் பகுதி பொறுப்பாளர் திவிக), மாரிமுத்து (வேலம் பாளையம் பகுதி கழகப் பொறுப்பாளர் திவிக) ஆகியோர் கலந்து கொண்டனர்.

**பங்கேற்ற அமைப்புகள் :** திருப்பூரில் கே.சுப்பராயன் எம்.பி, தலைமையில் வெள்ளியன்று அனைத்துக் கட்சி கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் திமுக சார்பில் டி.கே.டி. மு. நாகராசன், என். தினேஷ்குமார், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலக் குழு உறுப்பினர் கே.காமராஜ், மாவட்டச் செயலாளர் செ.முத்துக்கண்ணன், இந் திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் எம்.ரவி, காங்கிரஸ் மாவட்டத் தலைவர் ஆர். கிருஷ்ணன், மதிமுக மாநகர் மாவட்டச் செயலாளர் நாகராஜ், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர் தமிழ்வேந்தன், கொமதேக, முஸ்லிம் லீக், தமுமுக, த.பெ.தி.க., தி.க, உள்பட அனைத்து அரசியல் கட்சியினர் கலந்து கொண்டனர்.


## ஆர்.எஸ்.எஸ். பற்றி காமராஜர்



"குறிப்பாக அவர்களுக்கு (ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்களுக்கு) பயம் என்னைப் பற்றித்தான். இந்த காமராஜ் தான் சோசியலிச சமுதாயத்தினை அமைத்து தீருவேன் என்றே சொல்கின்றான். அவன்தான் அதிலே தீவிரமாக இருக்கின்றான் என்று நினைக்கிறார்கள். என் வீட்டுக்குத் தீ வைக்கின்றான். ஆனால் நான் இதற்கெல்லாம் கவலைப்பட மாட்டேன். என் வேலையை நான் செய்தே தீருவேன்."

– 11.12.1966 சேலம் பேருரை. நவசக்தி 15.12.1966

## ஆர்.எஸ்.எஸ். பற்றி காந்தி



"'வார்தா' ஆர்.எஸ்.எஸ். பயிற்சி முகாமுக்கு ஆர்.எஸ்.எஸ்.சின் அழைப்பின் பெயரில் காந்தி பார்வையிட சென்ற போது காந்தியின் சீடர் காந்தியிடம் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் நல்ல சேவைகளை செய் கிறார்கள் என்று சொன்ன போது. காந்தியார் அளித்த பதில் என்ன தெரியுமா?

"ஹிட்லரின் நாசிப்படையும், முசோலியின் பாசிசப் படையும் இதே போல்தான் சேவை செய்தது என்பதை மறந்துவிட வேண்டாம்."

தலையங்கம்

## “சூத்திரர்களை” இழிவுபடுத்திய ஆதி சங்கரரை பிரதமர் புகழ்வதா?

உத்தரகாண்ட் மாநிலம் கேதார் நாத்தில், ஆதி சங்கரரின் 12 அடி உயர சிலையைத் திறந்து வைத்துப் பேசிய பிரதமர் மோடி, “சமுதாய நன்மைக்காக ஆதி சங்கரர், புதிய குறிக்கோளுடன் செயல்பட்டார். சமஸ்கிருதத்தில் உள்ள வேதங்களை வரும் தலைமுறைக்கு நாம் கொண்டு செல்ல வேண்டும். தீர்த்த யாத்திரைகள் வழியாக நமது கலாச்சாரத்தைக் கொண்டு செல்ல வாய்ப்பு கிடைக்கிறது” என்று பேசி இருக்கிறார்.

பல்வேறு – மொழி – இனம் – மதங்களைக் கொண்ட ஒரு நாட்டின் பிரதமர், இப்படி கலாச்சாரத்தை ‘ஓர்மைப்படுத்தி’ பார்ப்பனிய சமஸ்கிருதப் பண்பாடு தான் இந்தியாவின் பண்பாடு என்று பேசுவது, அவர் அனைத்து பிரிவினருக்குமான பிரதமர் அல்ல என்பதையே வெளிப்படுத்துகிறது.

ஆதி சங்கரர் யார்? அவர் உருவாக்கிய அத்வைத சித்தாந்தத்தின் நோக்கம் என்ன? இந்தியாவை இந்து இராஷ்டிரமாக்க வேண்டும் என்பதற்காகவே விடுதலைப் போராட்டம் நடத்திய திலகர், ஆதிசங்கரர் பற்றி இவ்வாறு கூறுகிறார்:

“நாட்டில் எங்கும் பரவி இருந்த சமண பவுத்த கோட்பாடுகளை (இவை ஆரிய எதிர்ப்பு மதங்கள்) எதிர்த்து வாதிடும் அறிவுத் திறன் பெற்றிருந்தார். அதற்காகவே தனது அத்வைத சித்தாந்தத்தை உருவாக்கினார்” என்றார்.

‘உலகம் – உணர்வு – அறிவு அத்தனையும் மாயை; ஆத்மா மட்டுமே உண்மை’ என்று தத்துவம் பேசிய அவர், தனது தத்துவத்தைத் தவிர, அனைத்துமே பொய் என்றார். பவுத்தர்களையும் இறை மறுப்பாளர்களையும் எதிர் கொள்வதற்கு வைதீகப் பார்ப்பனர்கள் எதிர்ப்பையும் மீறி அவர் சீர்திருத்தம் என்ற பெயரில் முன்வைத்த வேதாந்த மரபு, பவுத்த மதம் பரவலைத் தடுத்ததோடு புத்த மார்க்கம் உருவான மண்ணிலேயே பூண்டோடு அழித்தது.

உலகமே மாயை என்று சொன்ன அவர், சிருங்கேரி (மைசூர்), பூரி (ஒரிசா), துவாரகை (குஜராத்), பத்ரிநாத் (இமாச்சலப் பிரதேசம்) ஆகிய நான்கு மடங்களை இந்த ‘உலகில்’ உருவாக்கித் தான் தனது தத்துவத்தைப் பரப்பினார். காஞ்சிபுரம் மடம் தன்னை சங்கர மடம் என்று கூறிக் கொண்டாலும், அது ஆதிசங்கரர் உருவாக்கியது அல்ல. ஆதிசங்கரர் மடம் தான் என்பதை நிலைநிறுத்த போலி ஆவணங்களைத் தயாரித்தது காஞ்சி மடம். இந்த மடங்கள் அனைத்துமே அத்வைதத்தைப் பரப்பவில்லை. வர்ணாஸ்ரமத்தைத் தான் பரப்பியது; பரப்பியும் வருகிறது.

தருண் விஜய் என்ற பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர், தமிழ்நாட்டுக்கு வந்து திருக்குறள் பெருமை பேசி, உத்தரகாண்ட் அரித்துவாரில் கங்கை கரையில் 12 அடி உயரத்தில் திருவள்ளுவர் சிலை வைக்க முயன்ற போது, அதற்கு சாதுக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். பிறகு சங்கராச்சாரியார் சவுக்கம் என்ற இடத்தில் நிறுவ முயன்றபோது ஆதி சங்கரர் பூங்காவில் ‘தீண்டப்படாத’ ஜாதியைச் சார்ந்த திருவள்ளுவர் சிலையை அனுமதிக்க முடியாது என்றனர். சிலையை நிறுவ முடியவில்லை. ஆதிசங்கர் சீடர்களாகக் கூறிக் கொள்ளும் சங்கராச்சாரிகள், இப்போதும் ‘தீண்டாமை’யை ஆதிசங்கரர் நிறுவிய மடங்களில் பின்பற்றி வருகிறார்கள்.

புத்த மார்க்கத்தின் உண்மையான நோக்கத்தை சிதைத்து, மகாயாணப் பிரிவை உண்டாக்கிய நாகர்ஜுனனுக்கு ஆதி சங்கரரின் அத்வைதக் கோட்பாடுகளே கை கொடுத்தன என்று ஆய்வாளர் தேவி பிரசாத் சட்டோபாத்யா சுட்டிக் காட்டுகிறார்.

இந்துத்துவவாதிகளும் மோடியும் போற்றும் விவேகானந்தர், ஆதிசங்கரர் பற்றி கூறியுள்ள கருத்துகளே அவர் யார் என்பதை அடையாளப்படுத்தி விடுகிறது.

“சூத்திரர்கள், வேதம் படிக்க உரிமையற்றவர்கள் என்று கூறிய ஆதிசங்கரர், அப்படி வேதத்தில் எங்கேயாவது கூறப்பட்டிருப்பதை ஆதாரங்களுடன் நிரூபித்துக் காட்டினாரா?” என்று கேட்கிறார். (“Adi Sankar has said that the Sudras have no right to learn Vedas, but could not quote any authority to prove it from the Vedas”) (ஆதாரம்: விவேகானந்தர் பேச்சு – எழுத்து 6ஆவது தொகுப்பு – பக். 203 – கல்கத்தா – 1958)

அது மட்டுமல்ல; ‘சூத்திரர்’ உபநிஷத்தை படிக்கக் கூடாது; யாகம் செய்யும் உரிமை கிடையாது என்றும் ஆதிசங்கரர் கூறியிருப்பதை விவேகானந்தர் எடுத்துக் காட்டி கண்டிக்கிறார்.

இப்படி ‘சூத்திர’ இழிவை நியாயப்படுத்திய ஒருவர் சிலையைத் திறந்து வைத்து அவரை சமுதாய நன்மைக்காக உழைத்தவர் என்று ஒரு நாட்டின் பிரதமர் பேசுகிறார்என்பது வெட்கக் கேடானது; கோடானு கோடி ‘சூத்திர’ மக்களை இழிவுபடுத்தும் கண்டிக்கத்தக்க பேச்சு.

# ஜெய் பீம் படத்தை எதிர்ப்பவர்கள் மதவாதிகளா? சமூக நீதியாளர்களா?

ஜெய் பீம் படம் குறித்து டெல்லி ஜவஹர்லால் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஹரிஷ் எஸ். வாங்கடே இந்து ஆங்கில நாளேட்டில் (நவம்பர் 11,2021) விமர்சனக் கட்டுரை ஒன்றை எழுதியிருக்கிறார். ஜெய் பீம் என்ற முழக்கம் தலித் மக்களுக்கானது மட்டுமல்ல அனைத்து விளிம்பு நிலை மக்களுக்குமான உரிமை முழக்கம் என்றும், அதைத்தான் ஜெய்பீம் படமும் குறிக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார். கதாநாயகனாக வரும் சந்துரு ஒரு மார்க்சிஸ்டாக சித்தரிக்கப்பட்டாலும், வர்க்கப்போராட்டம், மக்களை அணிதிரட்டல் என்ற மார்க்சிய அணுகுமுறைகளிலிருந்து விலகி ஜாதிய ஒடுக்குமுறை, அதற்கு துணைபோகும் காவல்துறையின் வன்முறைகளை தான் படமாக்கியுள்ளனர். சொல்லப்போனால் பூலே, பெரியார், அம்பேத்கர் பேசிய ஜாதி ஒடுக்குமுறைகளுக்கு எதிரான கருத்துக்களை, ஒரு மார்க்சிஸ்ட் வழக்கறிஞர் சட்டப்போராட்டம் வழியாக நடத்துகிறார்.

இடதுசாரிகள் வர்க்கப் பார்வையோடு ஜாதி எதிர்ப்பையும், தமிழ்நாடு,ஆந்திரா, மகராஷ்டிரா மாநிலங்களில் இணைத்து செயல்பட்டுக்கொண்டு வருகிறார்கள். அத்தகைய கதாநாயகர்தான் சந்துரு. என்று கட்டுரையாளர் சுட்டிக்காட்டுகிறார்.

விளிம்பு நிலையில் தள்ளப்பட்டுள்ள பல்வேறு சமூகத்தினருடைய படமாக இதைப் பார்க்க வேண்டும் என்பதே கட்டுரையாளரின் கருத்து. மாறாக அப்படிப்பார்க்காமல், தங்கள் ஜாதியை எதிர்க்கும் படமாக சிலர் எதிர்ப்பது எதைக் காட்டுகிறது ? நடிகர் சூர்யாவிற்கு பாமக இளைஞரணித் தலைவர் மருத்துவர் அன்புமணி கடுமையாக கண்டித்து கடிதம் எழுதியிருக்கிறார்.

இராஜாக்கண்ணுவை அடித்து சித்திரவதை செய்கிற ஆய்வாளர் வீட்டில் மாட்டப்பட்டிருக்கும் நாட்காட்டி, மற்றும் அந்த ஆய்வாளரின் பெயர் குருமூர்த்தி. இந்தப் பெயர், வன்னியர் சங்கத் தலைவராக இருந்த குருவை மறைமுகமாக உணர்த்துகிறது என்கிற குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டன. எதிர்ப்பு வந்தவுடன் படக்குழுவினர் அதை நீக்கிவிட்டனர். உண்மையில் சித்திரவதை செய்த காவல் ஆய்வாளரின் பெயர் ஆரோக்கியசாமி என்ற கிறிஸ்துவர். இதை ஏன் மறைக்க வேண்டும் என்று கேட்கிறார்கள்.

இந்தத் திரைப்படத்தில், வழக்கறிஞர் சந்துரு பாதிக்கப்பட்ட இராஜாகண்ணு என்ற பெயர்கள் தான் உண்மையான பெயர்கள். மற்றப் பாத்திரங்கள் திரைக்கதைக்காக உருவாக்கப்பட்டவை. ஒரு வரலாற்று நிகழ்வை மையமாக கொண்டு ஒரு திரைப்படத்தை உருவாக்கி அதற்கான திரைக்கதையையும், கதாபாத்திரங்களையும் திரைப்பட மொழியில் இப்படம் பேசுகிறது. இது ஆவணப்படம் அல்ல. இத்தகைய எதிர்ப்புகள் வந்த பிறகு தான் இந்த ஜாதி அடையாளங்களே மக்களுக்கு தெரிய வந்திருக்கிறது. சொல்லப்போனால் இராஜாக்கண்ணுவிற்கு நீதி கிடைப்பதற்காக 13 ஆண்டுகாலம் களப்போராட்டம் நடத்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொறுப்பாளர் கோவிந்தன் பிறவியில் ஒரு வன்னியர் தான்.

வன்னியர் சமூகத்தில் பிறந்தாலும் ஜாதி எதிர்ப்புக் கருத்துக்களை ஏற்று பெரியார் இயக்கங்களிலும், கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட முற்போக்கு இயக்கங்களிலும் களப்பணியாற்றக்கூடிய ஏராளமான வன்னியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இத்தகைய படங்களை வரவேற்கிறார்கள். பாராட்டுகிறார்கள்.

ஒவ்வொரு ஜாதிக்குழுவிலும் ஜாதியைக் கடந்தவர்கள், ஜாதி எதிர்ப்பாளர்கள் இருக்கிறார்கள். ஜாதி வெறி கொண்டவர்களும் இருக்கிறார்கள். அத்தகைய ஜாதி வெறியர்கள் போக்கு மாற்றப்பட வேண்டும் என்று ஒரு திரைப்படம் வந்தால் அது ஒட்டு மொத்தமாக எங்கள் ஜாதிக்கு எதிரான திரைப்படம் என்று கொதித்து எழுந்து கண்டிப்பவர்கள் சமூகநீதியாளர்களா? அல்லது புரையோடியிருக்கும் ஜாதியத்தை வெளியே தாங்கி நிற்பவர்களா?


எந்த முறைகேடுகளை செய்தாலும், “பிராமணன்” ஆகப் பிறந்த ஒருவன், இறக்கும் வரை ‘பிரம்மா’வின் நெற்றியில் பிறந்த உயர்குலத்தவன் தான் என்று மனுதர்மம் கூறுகிறது. எங்கள் ஜாதியைச் சார்ந்த எவர் குற்றம் செய்தாலும், அவர்கள் அக்னியில் பிறந்த க்ஷத்திரியர்களே. அவர்களை தனிப்பட்ட முறையில் குறை கூறினால், அது எங்கள் ஜாதிய சமூகத்துக்கே இழுக்கு என்றால், இவர்களும் மனுவாதிகள் தானே!

சமூகத்தில் தங்களை விட ஒடுக்குமுறைக்கு உள்ளாகி நிற்கும் இருளர் சமூகத்தின் அவலங்களை சித்தரிக்கும் ஒரு திரைப்படத்தை உண்மையான சமூக நீதியாளர்கள் முதலில் வரவேற்று பாராட்டுவார்கள். அதற்குப் பிறகு அதுபற்றிய குறைகளையும் கூற அவர்களுக்கு உரிமையுண்டு.

தலித் மக்களையும் விடுதலை சிறுத்தைகள் தலைவர் தொல். திருமாவளவனையும் இழிவுபடுத்தும் ‘திரவுபதி’ போன்ற படங்கள் வந்தபோது இவர்கள் தான் கொண்டாடினார்கள். தொல். திருமாவளவன் பெருந்தன்மையுடன் கடந்து போனதை நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

“அதிகாரத்தை நோக்கி கேள்வி எழுப்பிய ஒரு படத்தை ‘பெயர் அரசியலுக்குள்’ சுருக்க வேண்டாம்” என்ற சூரியாவின் கருத்தைத் தான் நாமும் வலியுறுத்துகிறோம்.

## உண்மையான பெண் விடுதலைக்கு



சட்டத்தாலும், மதத்தாலும், மாத்திரம் ஏற்பட்டதென்று சொல்வதற் கில்லாமல் பெண் சமூகம் ஒப்புக்கொண்டு, இந்நிலைக்கு உதவிபுரிந்து வருவதனாலும் இது உரம் பெற்று வருகிறதென்றே சொல்ல வேண்டும். அநேக வருட பழக்கங்களால் தாழ்ந்த ஜாதியார் எனப்படுவோர் எப்படித் தாங்கள் தாழ்ந்த வகுப்பார் என்பதையும் ஒப்புக் கொண்டு, தாமாகவே கீழ்ப்படியவும், ஒடுங்கவும் விளங்கவும் முந்துகிறார்களோ, அதுபோலவே பெண்மக்களும் தாங்கள் ஆண் மக்களின் சொத்துக்களென்றும், ஆண்களுக்கு கட்டுப்பட்டவர்களென்றும், அவர்களது கோபத்திற்கு ஆளாகக்கூடாதவர்கள் என்றும் நினைத்துக் கொண்டு சுதந்திரத்தில் கவலையற்று இருக்கிறார்கள். உண்மையாக பெண்கள் விடுதலை வேண்டுமானால், ஒரு பிறப்புக்கொரு நீதி வழங்கும் நிர்பந்தக் கற்பு முறை ஒழிந்து, இரு பிறப்பிற்கும் சமமான சுயேச்சைக் கற்பு முறை ஏற்பட வேண்டும். கற்புக்காகப் பிரியமற்ற இடத்தைக் கட்டி அழுது கொண்டிருக்கச் செய்யும்படியான நிர்பந்தக் கல்யாணங்கள் ஒழிய வேண்டும்.

குடி அரசு 08.01.1928

## பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து பா.ஜ.க. ஆட்சி வரை (16)

# ஒன்றிய ஆட்சியின் இந்தித் திணிப்புகள்

*பிரிட்டிஷ் ஆட்சி – காங்கிரஸ் ஆட்சி காலங்களில் தமிழர் உரிமைகள் பறிக்கப்பட்ட வரலாறுகளைத் தொடர்ந்து இத்தொடரில் – அதைவிட மோசமாக பா.ஜ.க. ஆட்சியின் 'இருண்டகால' வரலாற்றை சுருக்கமாகப் பார்ப்போம்.*

விடுதலை இராசேந்திரன்

**இந்தித் திணிப்பு (3.5.2017 'ஆனந்தவிகடன்' தீட்டிய தலையங்கம்)**

2011ஆம் ஆண்டு நாடாளுமன்ற நிலைக்குழு சமர்ப்பித்த இந்தி மொழி தொடர்பான பரிந்துரைகளுக்குக் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி இப்போது ஒப்புதல் அளித்துள்ளார். இந்தி பேசாத மாநிலங்களின் மீது இடியைப்போல் இறங்கியிருக்கும் இந்தப் பரிந்துரைகள் கீழ்வருமாறு...

1. ஜனாதிபதி, பிரதமர், மத்திய மந்திரிகள் உள்ளிட்ட தலைவர்கள், குறிப்பாக யாருக்கெல்லாம் இந்தி தெரியுமோ, அவர்கள் இனி நாடாளுமன்றத்திலும் பொது விழாக்களிலும் இந்தியில்தான் பேச வேண்டும்

2. விமானங்களில் இந்தியில்தான் அறிவிப்புகளை வெளியிட வேண்டும். அதைத் தொடர்ந்து, ஆங்கிலத்தில் அறிவிப்புகள் வெளியிடப்பட வேண்டும்.

3. இனி, விமானங்களில் வழங்கப்படுகிற செய்தித் தாள்கள் மற்றும் பத்திரிகைகள் 50 சதவிகிதம் இந்தி மொழியில் இருக்க வேண்டும். ஏர் இந்தியா விமான நிறுவனத்தின் டிக்கெட்டுகளிலும் இந்தி பெருமளவு பயன்படுத்தப்பட வேண்டும்.

4. மத்திய அரசின் டேராடூன் ஐ.ஏ.எஸ். பயிற்சி நிலையத்தில் அனைத்துப் பயிற்சி ஏடுகளும் இந்தி, ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

5. பள்ளிக் கல்வித்திட்டத்தில் இந்தி கட்டாயப் பாடமாகச் சேர்க்கப்படவேண்டும். முதல் கட்டமாக சி.பி.எஸ்.இ மற்றும் கேந்திரிய வித்யாலயா பள்ளிக்கூடங்களில் 10ஆம் வகுப்பு வரையில் இந்தி கட்டாயப் பாடமாக வைக்கப் படவேண்டும். இது தொடர்பாக மாநில அரசுகளுடன் மத்திய அரசு ஆலோசனை நடத்தி, கொள்கை வகுக்க வேண்டும்.

6 இந்தி மொழி பேசாத மாநிலங்களில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்கள், கல்வி நிறுவனங்களில், தேர்வுகள் மற்றும் நேர்முகத் தேர்வுகளில் இந்தியில் பதில் அளிப்பதை விருப்புரிமைத் தேர்வாகக் கொள்ள வேண்டும்.

இந்தப் பரிந்துரைகள் அனைத்தும் ஆறு ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது காங்கிரஸ் ஆட்சியின் போது அமைக்கப்பட்ட நாடாளுமன்ற நிலைக் குழுவால் முன் மொழியப்பட்டவை. இந்த நிலைக் குழுவின் தலைவரே, தமிழகத்தைச் சேர்ந்த, முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம்தான். இந்தியைத் திணிப்பதற்கான காங்கிரஸ் பரிந்துரைகளை பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சியில், 'இந்தி'யாவின் ஜனாதிபதி ஏற்றுக்கொண்டு ஒப்புதல் வழங்கியிருக்கிறார் என்பதுதான் உண்மை. பல்வேறு மொழிகள், தேசிய இனங்கள், பண்பாடுகளை அழித்து, இந்தி என்ற ஒற்றைமொழியை அனைத்துமட்டங்களிலும் கொண்டுவரும் நடவடிக்கைதான் இது.

"காங்கிரஸ் இல்லாத இந்தியாவை உருவாக்குவோம்" என்றார் மோடி. ஆனால், இதையெல்லாம் பார்க்கும் போது, இந்தி தவிர்த்த பிறமொழிகள் இல்லாத இந்தியாவை உருவாக்குவதுதான் நோக்கம் போலத் தெரிகிறது. நாம் அனைவரும் 'இந்தியர்' என்று இதுவரை சொல்லி வந்ததன் உண்மையான அர்த்தம், இனி 'இந்தி'யர் என்பது தானோ?

இனி, ஆனந்தவிகடன் தலையங்கமாவது தமிழில் இருக்கலாமா, அல்லது இதுவும் இந்தியில்தான் இருக்க வேண்டுமா? - என்று கேட்கிறது, 'ஆனந்த விகடன்'.

தமிழ்நாட்டில் 1967இல் கொண்டு வரப்பட்ட இருமொழிக் கொள்கையை ஒழித்து இந்தியைத் திணிக்கும் முயற்சிகள் அனைத்துத் துறைகளிலும் அரங்கேறி வருகின்றன.

1963இல் இந்திய ஆட்சி மொழி சட்டம் உருவானது. அதற்கான விதிகள் 1976இல் தான் வகுக்கப்பட்டன. அதில் இந்தியாவின் ஆட்சி மொழிக் கொள்கை தமிழ்நாடு நீங்கலாக அமுல்படுத்தப்படும் என்றே குறிப்பிடுகிறது. கடைசியாகக் கடந்த 14.5.2011லும் இது உறுதிப்படுத்தப்பட்டது. அதையும் மீறியே இப்போது இந்தி திணிக்கப்படுகிறது.

- தேசியக் கல்விக் கொள்கை என்ற கல்வித் திட்டத்தை ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி உருவாக்கி மாநிலங்களின் மீது திணித்தபோது மும்மொழித் திட்டத்தை வலியுறுத்தியது. உடனடியாக தமிழ் நாட்டிலிருந்து கண்டனக் குரல்கள் வலிமையாக எழுந்தன. அடுத்த இரு நாட்களிலேயே அதைத் திரும்பப் பெறுவதாக அறிவித்தது ஒன்றிய ஆட்சி.

- உ.பி.யில் அகில இந்திய ஆட்சி மொழிக் கூட்டத்தில் (12.11.2021) பங்கேற்றுப் பேசிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, "நான் ஒரு குஜராத்தி; ஆனால் என் தாய்மொழியைவிட இந்தி மொழியைத்தான் நேசிக்கிறேன் என்று கூறியதோடு, உள்துறை அமைச்சகத்தில் ஒரு கோப்பு கூட ஆங்கிலத்தில் எழுதப்படுவது இல்லை என்பதை பெருமையாகக் கூறிக் கொள்கிறேன். நாங்கள் இந்தியை ஆட்சி மொழியாக முற்றிலுமாய் பின்பற்றி வருகிறோம். இந்தியா சுதந்திரத்தின் நூற்றாண்டைக் கொண்டாடும் போது உள்நாட்டு மொழிகளும் ஆட்சி மொழியாக இந்தி வரவேண்டும்; அப்போது ஒரு அயல் மொழியினர் உதவியை நாம் நாடக் கூடாது. அந்த அளவுக்கு இந்தி வலிமை பெற வேண்டும் என்ற உறுதி மொழியை இந்தி மொழி ஆர்வலர்கள் இந்த ஆண்டு எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று பேசியிருக்கிறார். இந்தியே ஆட்சி மொழி என்ற கொள்கை தமிழ்நாட்டில் மட்டும் அமுல்படுத்தப்படாது என்று இப்போதுள்ள சட்டபூர்வமான நிலையை காற்றில் பறக்கவிட ஒன்றிய ஆட்சி தயாராகி விட்டது.

> - உள்துறை அமைச்சகத்தில் அனைத்து கோப்புகளும் இந்தியில் மட்டுமே எழுதப்படுவதாக பெருமை பேசுகிறார் அமித்ஷா.
> - மும்மொழிக் கொள்கையிலிருந்து விலக்கு பெற்ற தமிழ்நாட்டில் தொடர்ந்து இந்தியைத் திணிக்கிறது, ஒன்றிய ஆட்சி.
> - அஞ்சல் துறை, வங்கித் துறை, ஒன்றிய அரசுத் துறைகளில் இந்தித் திணிப்பு வேகம் வேகமாக நடக்கும்போது - தமிழ்நாட்டில் ஒன்றிய அரசுத் துறைகளில் இந்திக்காரர்களே நியமிக்கப்படுகிறார்கள்.

- சென்னை சரக்கு மற்றும் சேவை வரி உதவி ஆணையரான பா. பாலமுருகன் என்பவர்தான் இப்படியோர் அதிரடி குற்றச்சாட்டைச் சுமத்தியிருக்கிறார். இது குறித்து துறை சார்ந்த மேலதிகாரிகளுக்கு பாலமுருகன் எழுதியிருக்கும் கடிதத்தில்,

  "நான் சென்னை (புறம்) சரக்கு மற்றும் சேவை வரி ஆணையர் அலுவலகத்தின் இந்திப் பிரிவில் பணியாற்றி வருகிறேன். இந்தி மொழியைப் பரப்பும் இந்தப் பணியில் எனக்குத் துளியும் விருப்பம் இல்லை. எனவே, இந்தி எழுதப் படிக்கத் தெரிந்த, அந்தப் பிரிவில் பணியாற்றுவதற்கு விருப்பமுள்ளவர்களைப் பணி நியமனம் செய்ய உத்தரவிடும்படி மத்திய வரி மற்றும் சுங்கவரி வாரியத்தின் தலைவர் அவர்களைத் தாழ்மையுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்" என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்.

- 1976இல் அரசியலமைப்புச் சட்டத்தில் மாநிலங்களை மூன்று வகைகளாகப் பிரித்தார்கள். அதாவது, இந்தி பேசும் மாநிலங்கள், இந்தியைக் கல்வி மொழியாக மட்டும் வைத்திருக்கும் மாநிலங்கள், இந்தியைக் கல்வி மொழியாக அங்கீகரிக்காத மாநிலங்கள் என அவை பிரிக்கப் பட்டிருக்கின்றன. இதன்படி 'தமிழ்நாட்டிலுள்ள மத்திய அரசு அலுவலகங்களில் தமிழ் அல்லது ஆங்கிலத்தை அலுவல் மொழியாக வைத்துக் கொள்ளலாம்; இந்தி மொழியை அலுவல் மொழியாகப் பயன்படுத்தக் கூடாது' என்று 1976ஆம் ஆண்டிலேயே அலுவல் மொழிச் சட்டத்தில் திருத்தம் செய்துவிட்டார்கள்.

- சட்டம் இப்படியிருக்கும்போது, தமிழ்நாட்டிலுள்ள மத்திய அரசு அலுவலகங்களில், இந்தியைப் பரப்புவதற்கென்று தனிப்பிரிவு வைத்திருப்பதே தவறானது. அடுத்து, இந்தி மொழியே தெரியாத ஒருவரை, இந்தி பரப்பும் குழுவில் நியமிப்பதற்கான நோக்கம் என்ன?

- தமிழ்நாட்டிலுள்ள எல்.ஐ.சி., பெல், ஏ.ஜி.எஸ் அலுவலகம் உள்ளிட்ட மத்திய அரசு நிறுவனங்களில் இந்தி மொழி திணிக்கப்படுவதை எதிர்த்து ஏற்கெனவே ஊழியர்கள் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள்.

- 2014இல் ராணிப்பேட்டை பெல் தொழிற்சாலையில் ஓர் அதிகாரி வழக்கத்துக்கு மாறாக வேண்டுமென்றே இந்தி மொழியிலான சுற்றறிக்கையை தொழிலாளர்களுக்கு அனுப்பி வைத்தார். அதிகாரியின் இந்த நடவடிக்கைக்கு எதிராகப் போராடிய தொழிலாளர்களும் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கும்வகையில், இந்தி மொழியில் அனுப்பப்பட்ட சுற்றறிக்கைக்குத் தமிழ் மொழியிலேயே பதில்களைத் தயார் செய்து அனுப்பிவைத்தனர்

**வங்கித் துறைகளில்...**

வங்கி பணியாளர் தேர்வு நிறுவனம் (IBPS) என்பது நிதி அமைச்சகத்தின் கீழ் உள்ள ஓர் அரசு நிறுவனமாகும். 2014ஆம் ஆண்டிற்கு பிறகு ஆங்கிலம் மற்றும் இந்தியில் மட்டுமே வேலைக்கு சேருபவர்களுக்கான ஆரம்ப தேர்வுகளை நடத்தியது. 2019ஆம் ஆண்டில் கிராமப்புற மற்றும் பிராந்திய வங்கிகள் உட்பட தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் பணியாளர்களுக்கான ஆரம்பத் தேர்வுகள் இந்தி மற்றும் ஆங்கிலத்தில் மட்டுமே நடைபெறும் என்று IBPS அறிவித்தது.

ஆட்சேர்ப்புக் கொள்கை மாற்றப்பட்டதன் காரணமாக உள்ளூர் பணியாளர்கள் 90% பேர் வேலை வாய்ப்பை இழக்கின்றனர். மேலும், இளைஞர்கள் வேலை வாய்ப்புகளை இழக்கிறார்கள்; அந்தந்த மாநிலங்களின் தாய்மொழி மட்டுமே தெரிந்த வாடிக்கையாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். வங்கியில் பணம் போடுவதற்கும் எடுப்பதற்கும் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். வாடிக்கையாளர்களை இந்தி கற்றுக்கொள்ள வேண்டும் என்று நிர்பந்திக்கப்படுகிறார்கள்.

இதற்கு நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் இருந்து ஆளும் கட்சிகள், எதிர்க்கட்சிகள் உள்ளிட்டு பலரும் கடும் எதிர்ப்பை தெரிவித்தனர். அதனைத் தொடர்ந்து மாநில மொழிகளில் வங்கிப் பணியாளர் தேர்வுகள் நடத்தவிருப்பதாக அறிவித்திருக்கிறது.

அஞ்சல் அலுவலக பண விடைகள் (Money order) சிறு சேமிப்பு படிவங்கள் (Small savings forms) இந்தியிலும், ஆங்கிலத்திலும் மட்டுமே இணைய வழியில் கிடைக்கின்றன; அலைபேசிகளில் கூட சாதாரண மக்கள் தமிழ் எழுத்துக்களை தரவிறக்கம் செய்ய தமிழில் வாய்ப்பில்லை. இது குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன், தலைமை அஞ்சல் நிலைய பொது மேலாளருக்கு கடிதம் எழுதி நேரில் சந்தித்து வற்புறுத்திய பிறகு தமிழ் இடம் பெறச் செய்யப்பட்டது.

- தமிழ்நாட்டின் அஞ்சல் துறைகளில் தமிழே தெரியாத வடநாட்டார்கள், தமிழ் தேர்வில் சிறந்த மதிப்பெண்களைப் பெற்றதாக மோசடியாக தமிழ்நாட்டில் வேலை வாங்கிய மோசடி மத்திய தேர்வாணையத்தில் நடந்தது. மோசடி அம்பலமானப் பிறகு, தேர்வுகள் இரத்து செய்யப்பட்டன.

- மத்திய அரசால் நடத்தப்படும் தொழில்நுட்ப உயர் கல்வி நிறுவனங்களுக்கான அய்.அய்.டி. கூட்டு நுழைவுத் தேர்வுகளை (ஜே.இ.இ.) தமிழ் மொழியில் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை ஒன்றிய அரசு மறுக்கிறது. ஆங்கிலம், இந்தி மொழிகளில் நடத்தப்படும் தேர்வுகள், மாநில மொழியான குஜராத்துக்கு மட்டும் சிறப்புரிமை வழங்கப்பட்டு, குஜராத் மொழியில் நடத்தப்படுகிறது.

- 145க்கும் மேற்பட்ட ஒன்றிய நிறுவனங்களுக்கு பல கட்ட தேர்வுகளை நடத்தி ஊழியர்களை தேர்வு செய்யும் ஒன்றிய அரசு தேர்வாணையம், மண்டலங்கள் வாரியாக தேர்வு நடத்தும் முறையை ஒழித்து, அகில இந்திய தேர்வுகளாக மாற்றியதால் இந்தி பேசும் வடநாட்டுக்காரர்கள், ஒன்றிய அரசுப் பணிகளை பெருமளவில் கைப்பற்றி வருகிறார்கள்.

(தொடரும்)

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 18.11.2021**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## அன்பு தனசேகர் இல்ல மணவிழா : கழக ஏட்டுக்கு ரூ.50,000/– நன்கொடை



திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர் -லதா இணையரின் மூத்த மகள் தமிழ்செல்வி - சிறீராம்குமார் மணவிழா வரவேற்பு நிகழ்வு 9.11.2021 அன்று சென்னையில் நடைபெற்றது.

நிகழ்வில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், மூத்த வழக்கறிஞர் எஸ். துரைசாமி, தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.அன்பழகன், பேராசிரியர் சரஸ்வதி, மாணவர் நகலகம் உரிமையாளர் சவுரிராசன், மணிமேகலை, பொள்ளாச்சி மா. உமாபதி, தடா ஓ. சுந்தரம், வருமான வரித் துறை முதன்மை ஆணையர், செல்வகணேஷ், இணை ஆணையர் பி. நந்தகுமார் ஆகியோர் பங்கேற்றனர். தலைமை நிலையச் செயலாளர் மற்றும் சென்னை மாவட்ட நிர்வாகிகள் பெருந்திரளாகப் பங்கேற்று சிறப்பித்தனர். சுகாதாரத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், மணமக்களை நேரில் வந்து வாழ்த்தினார்.

மணமக்கள் சார்பாக ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்திற்கு ரூ.50,000/-மும், குழுமூர் அனிதா அறக்கட்டளைக்கு ரூ.10,000/- அளிக்கப்பட்டது.

## பாஜக பொதுச் செயலாளர் முரளிதர ராவ் சொல்கிறார்

## “பிராமணர்களும் பனியாக்களும் எங்களின் பாக்கெட்டில் உள்ளனர்!”

‘பிராமணர்’களும் பனியாக்களும் பாஜக-வின் பாக்கெட்டில் உள்ளனர் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் முரளிதர ராவ் கூறியுள்ளார். மத்திய பிரதேசத் தலைநகர் போபாலில் முரளிதர ராவ் செய்தியாளர்களுக்குப் பேட்டி ஒன்றை அளித்துள்ளார். “பாஜக-வும் பாஜக ஆட்சிகளும் பழங்குடிகள், தாழ்த்தப்பட் டோர் முன்னேற்றத்துக்கு சிறப்பு கவனம் செலுத்தி வருகின்றன. பழங்குடிகள், தாழ்த்தப்பட்டோரை வாக்கு வங்கிகளாக நாங்கள் கருதவில்லை. அவர்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு, வளர்ச்சித் திட்டங்களை வழங்கவே பாஜக விரும்புகிறது. அதனால்தான் தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்கள் மீது கவனம் செலுத்துகிறோம்” என்று அந்தப் பேட்டியில் அவர் கூறியுள்ளார்.

அப்போது, “பாஜக என்றாலே “பிராமணர்கள்”, பனியாக்கள் கட்சிதான் என அடையாளப்படுத்தப்பட்டு இருக்கிறது. இன்றோ தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்கள் மீது கரிசனம் காட்டுகிறீர்கள். மற்றொரு பக்கம் அனைவருக்குமான வளர்ச்சி, முன்னேற்றம் என முழக்கம் எழுப்புகிறீர்கள். இது முரண்பாடாக இல்லையா?” என செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதற்குப் பதிலளித்த முரளிதர ராவ், “உண்மைதான்... “பிராமணர்”களும் பனியாக்களும் எங்க பாக்கெட்டில்தான் இருக் கிறார்கள். பாஜக-வில் “பிராமணர்”கள், பனியாக்கள் அதிகம் இருப்ப தால்தான் ஊடகங்கள் எங்கள் கட்சியை பிராமணர்கள் - பனியாக்கள் கட்சி என குறிப்பிடுகின்றன. பாஜக-வைப் பொறுத்தவரை அனைத்துத் தரப்பு மக்களின் நம்பிக்கையை பெறுவதில் உறுதியாக உள்ளது. அதை நோக்கி பயணித்து வருகிறோம்” என்று தெரிவித்துள்ளார். முரளிதர ராவின் இந்தப் பேச்சுக்கு காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

“அதிகாரம் கையில் இருக்கிறது என்கிற மமதையில் பாஜக தலைவர்கள் பேசி வருகின்றனர்” என்று முன்னாள் முதல்வர் கமல் நாத் கண்டனம் தெரிவித்துள்ளார்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகை யாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049 newsdvk@gmail.com

## அர்ச்சகர் உரிமை: பார்ப்பனர்கள் இரட்டை வேடம்

அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகலாம் என்று தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்தபோது இப்படி ஒரு ஆணையைப் பிறப்பிப்பதற்கு அறநிலையத் துறைக்கோ, தமிழ்நாடு அரசுக்கோ உரிமையில்லை என்றும் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராக கூடாது என்றும் அனைத்து பார்ப்பனர்களும் கூறினார்கள். உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந் தார்கள். உச்சநீதிமன்றத்திலும் சுப்ரமணியசாமி இதன் அடிப்படையில் வழக்கு தொடர்ந்திருக்கிறார். அவர்களிடம் சில கேள்விகளை நாம் கேட்க வேண்டி இருக்கிறது.

14.11.2021 அன்று பத்திரிக்கையில் வந்த இரண்டு சம்பவங்களை குறிப்பிட விரும்புகிறோம். முதலில் ஸ்ரீரங்க கோவிலை பற்றி. ஸ்ரீரங்க கோவில் ஒரு வைணவக் கோவில். இந்தக் கோவிலுக்குள் மோடியின் பேச்சை ஒலிபரப்பி யிருக்கிறார்கள். ஒலிபரப்பியது, பாஜக தலைவர் அண்ணாமலை, அவரது பாஜக தொண்டர்கள். இதை எதிர்த்து ரங்கராஜ நரசிம்மன் என்கிற வைணவப் புரோகிதர், முகநூலில் கடுமையான எதிர்ப்பை தெரிவித்தார். இந்த எதிர்ப்பு தெரிவித்ததனால் பாஜகவினர் கடுமையாக மிரட்டுகிறார்கள். லாரி ஏற்றி கொன்றுவிடுவோம் என்று கூறுகிறார்கள். அப்படி ஒரு மரணம் நிகழுமானால் பாஜக அண்ணாமலை தான் காரணம் என்று முகநூலில் கடுமையாக பதிவிட்டு இருக்கிறார். இவர், அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆக கூடாது, அதில் தலையிட அரசுக்கு உரிமையில்லை. என்று சொன்னவர். அவரே தற்போது அரசாங்க உதவியை நாடுகிறார். கோயில் கடவுள் சிலையை அர்ச்சகர்கள் வீட்டுக்கு எடுத்துப் போய் விடுங்கள் என்று கூறியது இவரே.

1982 இல் கோவில் வழிபாட்டுத் தலங்கள் தவறாகப் பயன்படுத்தப்படக் கூடாது என்று ஒரு சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தின்படி அண்ணா மலை மீதும், பாஜக வினர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கூறியிருக்கிறார். அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகலாம் என்று அரசு ஆணை பிறப்பிப்பது, அரசுக்கு உரிமையில்லை ! ஆனால், வைணவக் கோவிலில் சைவ மடத்தில் மோடி பேசிய பேச்சை ஒலிபரப்புவது எதிரானது என்று வருகிறபோது தமிழ்நாடு அரசுக்கு, அறநிலையத்துறைக்கு இதில் உரிமையுண்டு சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவரே பதிவிடுகிறார். இந்த இரட்டை வேடத்தை புரிந்து கொண்டாக வேண்டும்.

மற்றொன்று, காஞ்சி வரதராஜர் சுவாமி கோவிலில் நடந்த ஒரு நிகழ்வு. இந்தக் கோவிலில் இப்போது பிரம்மோத்சவம் நடந்து கொண்டு இருக்கிறது. இதில் அய்ந்தாவது நாளில் தென்கலைப் பிரிவினருடைய ஸ்தோத்திர பாடல் பாடப் படுவது வாடிக்கை, ஆனால் வடகலைப் பிரிவினர் தென்கலைப் பிரிவினருடைய ஸ்தோத்திரங்களை பாடக்கூடாது என்று தொடர்ச்சியாக எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள். இதனால், வட கலையும், தென்கலையும் அடிக்கடி கைகலப்பில், அடிதடியில் ஈடுபட்டு வருகின்றனர். இப்போது தென்கலைப் பிரிவைச் சார்ந்த ரங்கநாதர் உயர்நீதி மன்றத்தை நாடியிருக்கிறார். உயர்நீதிமன்றத்தில், இந்தப் பிரச்சனையில் தலையிட்டு அறநிலையத்துறை தீர்த்து வைப்பதற்கு உரிமையுண்டு, அறநிலையத்துறை தலையிட்டு இந்தப் பிரச்சனையை தீர்த்து வைக்க வேண்டும் என்று அவர் உயர்நீதிமன்றத்தில் கூறியிருக்கிறார். உயர்நீதி மன்றமும் இந்தக் கோரிக்கையை ஏற்று அறநிலையத்துறை தலையிட்டு இந்தப் பிரச்சனையை சுமூகமாக தீர்த்து வைக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறது.

வடகலை தென்கலை மோதல் குறித்து 1882ஆம் ஆண்டிலும் பிறகு 1962ஆம் ஆண்டிலும் நீதிமன்றங்களில் வழக்கு வந்திருப்பதை சுட்டிக் காட்டியிருக்கிறது உயர்நீதிமன்றம். அறநிலையத் துறை சட்டம் 63(இ) பிரிவின்படி கோயில் சம்பிரதாயங்கள் மீறப்படுவதாக புகார் வந்தால், அறநிலையத் துறை துணை ஆணையரோ, இணை ஆணையரோ தலையிட முடியும் என்று கூறுவதால், அறநிலையத் துறை இதில் தலையிட்டு தீர்வு காண வேண்டும் என்று உயர்நீதிமன்றம் உத்தரவிட் டுள்ளது. ‘சம்பிரதாயங்கள்’ என்று பார்த்தால், கோயிலில் பிராமணர்கள் வழிபாட்டு உரிமைகளே கிடையாது என்று பல்வேறு தீர்ப்புகளில் கூறப்பட்டிருப்பதை வழக்கு ஆதாரங்களுடன் நாகர்கோயில் வழக்கறிஞர் சிதம்பரம், தனது நூலில் ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டியிருப்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

வைணவர் கோவிலில் சைவ மடத்தில் மோடி பேசிய பேச்சை ஒலிபரப்புதல் என்று வருகிறபோது அது பாஜகவினராக இருந்தாலும் கூட, தமிழ்நாடு அரசு விதித்த சட்டத்திற்கு எதிரானது என்று கூறுகிறார்கள். மற்றொரு பக்கம், தென்கலைக்கும், வடகலைக்கும் மோதல் வருகிறபோது இதில் தலையிட்டு சமரசம் செய்யக்கூடிய உரிமை அறநிலையத்துறைக்கு உண்டு என்கிறார்கள். ஆனால் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆகும் உரிமை உண்டு என்று அரசு உத்தரவு பிறப்பிக்கும் போது அரசுக்கு உரிமை யில்லை, அறநிலையத்துறைக்கு உரிமையில்லை என்று கூறுகிறார்கள். எனவே இவர்களின் இரட்டை வேடத்தை புரிந்து கொண்டாக வேண்டும். இந்த இரட்டை வேடத்திற்குப் பின்னால் பதுங்கி நிற்பது, “கோவில் கர்ப்பகிரகம் என்பது தங்களுடைய பார்ப்பன ஆதிக்கப் பிடியில் இருக்க வேண்டும்” என்பது ஒன்று மட்டுமே தான்.

- இரா

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 18th November 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN